மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்டத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையில் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. அறிவிப்பு.

வானொலியில் பேரவை நடவடிக்கை தவறாக அறிவிக்கப்பெற்றது—தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு 4—3—1981 அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வானொலியில் சட்டமன்ற நிகழ்ச்சிகளை விமரிசனம் செய்வது குறித்து ஒரு பிரச்சனையை எழுப்பினர்கள். 'சட்டமன்றத்தில் இன்று' என்ற தலைப்பில் ஒவ்வொரு நாளும் சட்ட மன்ற நடவடிக்கைகள் குறித்து வானொலியில் ஒலி பரப்பப்படுகிறது. வானொலி நிலயைத்தின் நிருபர் அல்லாது பத்திரிகை நிருபர்களை ஒவ்வொரு நாளுக்கு ஒவ்வொருவராக இவ்வித விமரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது. இப்படி இன்றி வானொலி நிலையமே தன் நிருபர்களைக் கொண்டு இந்த நிகழ்ச்சிகளைத் தயாரித்தால் கட்சி விருப்பு வெறுப்பின்றி அந்நிகழ்ச்சிகள் அமையும் என்றும், இது குறித்துப் பேரவைத் தலைவர் அவர்கள் வானொலி நிலையத்தாருடன் தொடர்பு கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்றும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

ஏற்கெனவே இதே போன்று ஒரு பிரச்சனை வந்த போது 9—11—1979 அன்று வானொலி நிலையத்தாருக்கு இது குறித்து எழுதப்பட்டது. எனவே பிரச்சனை மீண்டும் எழுப்பப் பட்டபோது வானொலி நிலையத்தாரிடமிருந்து ஒரு தகவல் வரப் பெற்றுள்ளது. அதன் முக்கிய பகுதிகளைப் பேரவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

[முற்பகல் 10-30]

A reference was made on th's matter to the News Serv'ces Division of All India Radio, New Delhi. He has categor'cally clarified that the p esent arrangements to get the rev'ews scripted by newspapar Agenc'es' Correspondents should cont'nue. The relevant portions of the gu'delines issued by the D'rector of News Services as reproduced below will make the position clear.

பேரவைத் தலைவர்

1981 ஏப்ரல் 9]

"....the purpose of both Parliament and Assembly reviews, is not only to present to the listeners an objective and balanced account of the House, and experienced journalists working for various newspapers and agencies are drafted to script these reviews. The guidelines given to the script-writers are that they should give a commentative review and present a synoptic listing of the Members. However, they have been asked to notice the contribution made by as many Members as possible without making the commentaries dull or monotonous catalogue of names. Besides, this they have also been asked to avoid devoting disproportionate space to minor incidents or to dramatise them. Apart from these guidelines, the script writers are booked by rotation. The final scripts is also required to be vetted by the i e AIR Parliament Assembly Reporting team. All these procedures are aimed at ensuing unbiassed reviews: ....the particular pattern which he have dopted for Parlimentary as well as Assembly reviews cannot be changed nor can we have different arrangements for different States, like staffers for some regions and journalists for others.

எனவே, அனைத்திந்திய அளவில் கையாளப்படும் ஒரு முறை யாக இது இருப்பதாக தெரிகிறது. இது குறித்து அரசு அளவில் உயர் மட்டத்தில் மைய அரசுடன் தொடர்பு கொண்டு வழி வகுப்பது முறையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) கோவை மத்திய கூட்டுறவு வங்கி கிளைகளில் அடமானம் வைக்கப்பெற்ற நகைகள் களவு

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, கோயம் புத்தூர் மத்திய கூட்டுறவு வங்கியின் கிளைகளில் அடமானம் வைக்கப் பெற்ற நகைகள் களவாடப்பட்டது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட் டுறவு சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்-: